www.tamilarangam.net

# விளைநிலங்களை பாலையாக்கும் இறால் பண்ணைகள்



விவசாயிகள் விடுதலை முன்னணி

தமிழ்நாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடு
*விவசாயிகள் விடுதலை முன்னணி தமிழ்நாடு*

அக்டோபர் 1994

விலை : ரூ.2/-

பிரதிகள் மற்றும்
அமைப்பு தொடர்பு
வேண்டுவோர்
அணுக வேண்டிய முகவரி:

---

படியுங்கள்

**புதிய ஜனநாயகம்**

புரட்சிகர மாதமிருமுறை அரசியல் ஏடு

---

**புதிய கலாச்சாரம்**

மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

---

முற்போக்கு நூல்களுக்கு ஒரு முகவரி,

**கீழைக்காற்று**

நூல் வெளியீட்டகம், விற்பனையகம்
10, ஔலியா சாகிப் தெரு, எல்லீசு சாலை,
சென்னை - 600 002.

● பத்திரிகைகள் ● ஒலி, ஒளி நாடாக்கள்
● புதிய படைப்புகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1991-ம் ஆண்டு வாக்கில் பெருந்தோட்ட கிராம நிலங்களில் ஆண்டிற்கு சராசரியாக ரூ 500 மட்டுமே வருமானம் வந்தது; நிலத்தின் விலையும் ஏக்கர் ரூ 2000-க்கே விற்றன; 1993-ம் ஆண்டு இறால் பண்ணைகள் வந்தவுடன் நிலத்தின் விலை ஏக்கர் ரூ 75000 என்று ஏறி அப்பகுதி விவசாயிகள் ஆதாயம் அடைந்தனர்; இறால் பண்ணை அமைக்கப்பட்டதால், வருமானம் ஆண்டிற்கு ரூ 2 லட்சத்திலிருந்து ரூ 5 இலட்சம் வரை உயர்ந்தது என்று மயிலாடுதுறை காங்கிரஸ் எம்.பி.யும் அரசியல் புரோக்கருமான மணி சங்கர ஐயர் பெருமையோடு சொல்கிறார். (ஆங்கில வார இதழ் சண்டே, 16-24 செப், 1994).

ஏதோ இந்த இலட்சக்கணக்கான வருமானம் போய் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு கிடைத்து வருகிற மாதிரி மணி சங்கர ஐயர் எழுதியுள்ளார். ஆனால் உண்மை என்ன? கல்கத்தா, பம்பாய், சென்னை போன்ற பெருநகரங்களில் வாழும் பெரும் முதலாளிகளுக்குத்தான் இந்த ஆதாயம் போய்ச் சேருகிறது! மத்தியில் ஆளும் காங்கிரசின் துரோகம், பதவி நலன் காரணமாக காவிரி நீரில் தமிழகத்தின் நியாயமான பங்கு கிடைக்காததால் தான் பெருந்தோட்டப் பகுதி நிலங்களுக்கு ஏற்கனவே கிடைத்த பாசன நீர் கிடைக்கவில்லை. அதனால்தான் அங்கு நல்ல மண் வளமிருந்தும் முப்போகம் விளையக்கூடிய அந்த நிலங்கள் வானம் பார்த்த பூமியாக்கப்பட்டன. இதை எல்லாம் மறைத்து விட்டு கைகூசாமல் பொய் எழுதுகிறார் மணி சங்கர ஐயர்; அரசாங்க சன்மானங்களை பொறுக்கித் தின்ன அரசியலுக்கு வந்த பிறிவியிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

www.tamilarangam.net

நாளெல்லாம் நமது செல்வம்
கொள்ளை கொண்டு போகவோ?
வீரர்கள் நாம் அல்லமோ?
உயிர் என்ன நமக்கு வெல்லமோ?
கொலை வாளினை எடடா - மிகு
கொடியோர் செயல் அறவே



**விவசாயிகள் விடுதலை முன்னணி**
தமிழ்நாடு

www.tamilarangam.net




**அன்பார்ந்த உழைக்கும் மக்களே!**

தஞ்சை பஞ்ச பூமியாகிறது. நம்பமுடியவில்லையா? தஞ்சை நஞ்சையாயிற்றே. பசுமையல்லவா அதன் நிறம். அங்கெல்லாம் காளை கட்டினால் மாளாதென்றுதானே யானைகட்டி போரடிப்பார்கள் என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தீர்களென்றால் நீங்கள் உலகமறியாதவர். அதுவெல்லாம் முடிந்து போன பழங்கதை. காவிரியைத்தான் இடைமறித்து விட்டார்களே என்பதனால் இதைச் சொல்லவில்லை. காவிரி இல்லையென்றால் நஞ்சை புஞ்சையாகலாம், உவராகுமா? உப்பாகுமா?

கர்நாடகத்தான் தடுத்துவிட்ட காவிரியை மீட்டு வரத் துப்பில்லாத பார்ப்பன பாசிச ஜெயலலிதாவும் மத்தியில் ஆளும் நரசிம்ம அவதாரமும் இன்று புதிய நோக்கத்துடன் தஞ்சைக்குள் புகுந்திருக்கிறார்கள். கடைமடைப் பகுதியில் காவிரியின் எதிர்திசையில் வங்கக் கடலை திருப்பி விட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் இருக்கும் இரு போகம் விளையும் அயன் நஞ்சை நிலத்திலெல்லாம் இறால் மீன்களை விதைத்து முப்போகம் எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். நெல் விளையும் சமதளமான நிலப்பரப்பில் குளங்களை வெட்டி கடல் நீரைக் கொண்டு வந்து நிரப்பி வைத்து அதில் இறால்மீன்களை வளர்க்கும் இறால் பண்ணைகளை அமைத்து வருகிறார்கள்.

கடல்நீரைக் கொண்டு வந்து விளைநிலத்தில் தேக்கினால் சுற்றிலுமுள்ள விளைநிலங்களும் சேர்ந்து உவராய்ப் போகிறதே என்று விவசாயிகள் கூக்குரலிடுவதைப் பற்றி அவர்கள் அக்கறைப்படவில்லை. நிலத்தையே சார்ந்து வாழும் கூலி, ஏழை நடுத்தர விவசாயிகள் வேருடன் பிடுங்கப்பட்டு ஓட்டாண்டிகளாய் வீசி எறியப்படுவது பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. ஒட்டுமொத்தமாய் சுற்றுச்சூழல் நிலைமைகளே பாழ்பட்டுப் போகுமே. நிலத்தடி நீரெல்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாம் நஞ்சாகிப் போகுமே, குடிக்கவும் தண்ணீர் கிடைக்காமல் போகுமே என்றெல்லாம் யார் எடுத்துச் சொன்னாலும் எதையும் அரசும், இறால்பண்ணை முதலாளிகளும் காதில் வாங்கிக் கொள்வதாக இல்லை. உடனுக்குடன் கைத் கெட்டும் பணம் அவர்களின் கண்களை மறைக்கிறது. கேட்டாலும் திமிராக சொல்கிறார்கள். ''நிலமாவது, நீராவது, இறால் வளர்ப்பில் விளைவதெல்லாம் பணம்'', ''நெற்பயிர் யாருக்கு வேண்டும்? இறால் மீன் பணப்பயிர் '' என்கிறார்கள்.




இப்படி காவிரி நீர் பிரச்சனைக்கு குரூரத்துடன் கூடிய புதிய தீர்வை கண்டுபிடித்திருக்கிறார்கள் பாசிச ராவும், ஜெயாவும். படித்தால் தானே வேலை கேட்பாய். ஒதுக்கீடு கேட்பாய். படிப்பதை தடுத்துவிட்டால்?... படிக்க வாய்ப்பே இல்லாமல் செய்து விட்டால்? என்று கல்வி பிரச்சனையை கையாளும் கூட்டம்ல்லவா! காவிரிபிரச்சனைக்கும் அதே அணுகு முறைதான். நிலமிருந்தால் தானே நீர் கேட்கிறாய். நிலமே இல்லாமல் செய்துவிட்டால்? வயலும் வரப்பும் இருக்கப் போய் தானே பயிர் செய்ய எண்ணுகிறாய்? உப்பும் உவருமாக்கிவிட்டால்? குடிக்கிற தண்ணீர் கொடுத்தால் தானே பயிர் வளர்க்க தண்ணீர் கேட்கிறாய். குடிக்கவே தண்ணீரில்லாமல் அலைய விட்டால்? என்ற வக்கிர புத்தியுடன் மக்களை பழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாங்குவதோடு தங்களின் பணப்பையையும் நிரப்பிக் கொள்கிறார்கள். ஒரே கல்லில் இரண்டு மாங்காய். அதனால்தான் இறால் பண்ணைகளை அமைப்பதற்கு அரசு எல்லா வகையிலும் சலுகைகள் கொடுத்து ஊக்கப்படுத்தி வருகிறது.

**விளைவுகளும் விபரீதங்களும் மக்களுக்கு**
**லாபம் கொழிக்கிறது முதலாளிகளுக்கு:**

இறால் பண்ணை தொழிலில் முதலாளிகளுக்கு குறைந்த முதலீட்டில் மிகக் குறுகிய காலத்தில் லட்சக் கணக்கில் கொள்ளை லாபம் கிடைக்கிறது. 21/2 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் பண்ணை அமைக்க சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது. ஒரு முறை இறால் வளர்த்தால் சராசரியாக 5 டன் கிடைக்கும். ஒரு ஆண்டுக்கு 3 முறை மகசூல் எடுக்க முடியும். ஒரு ஆண்டுக்கு 15 டன்கள் என்றால் ஒரு கிலோ எடை ரூ 350 (குறைந்தது) எனும் போது செலவெல்லாம் போக ரூ 20 லட்சமாவது நிகர லாபம் நிற்கிறது. அதுவும் அந்நிய செலாவணியாக கிடைக்கிறது.

அதனால்தான் இந்த இறால் வளர்ப்புத் தொழிலில் ஹைடே, ஸ்பென்சர், சிறீராம், மேக்னாபுட், பிரானக்ஸ் போன்ற பெரிய தரகு முதலாளி குடும்பங்களும் மும்முரமாய் ஈடுபட்டிருக்கின்றன. இன்னும் சிறிய பெரிய முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் சக்திக்கேற்ப முண்டியடித்துக் கொண்டு இறால் பண்ணைகளை அமைத்து வருகின்றனர். கடைமடைப் பகுதிமுழுவதிலும் இன்று இறால்கள் மேயத் தொடங்கிவிட்டன.

**நாளும் புற்றீசலாய் புறப்படும் புதுப்புதுப் பண்ணைகள்:**

960 கி.மீ. நீளமுள்ள தமிழகத்து கடற்கரைப் பகுதிகளில் தஞ்சை, நாகை, காரைக்கால் மற்றும் புதுக் கோட்டை வட்டங்கள் சுமார் 200 கி,மீ. நீளம் கொண்டவை. இப்பகுதிமுழுவதிலும் இன்றளவில் சுமார் 25000 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் புதுப் புது பண்ணைகள் அங்கங்கும் முளைத்து வருகின்றன.

பூம்புகார் பகுதியில் சிறீராம் கம்பெனி 200 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் பண்ணைகள் அமைத்துள்ளது. எல்லாமும், காவிரியில் நீரிருந்தால் இருபோகம் நெல்லும் ஒருபோகம் கடலையோ, உளுந்தோ விளையக்கூடிய விளைநிலங்கள். சீர்காழி வட்டத்தில் ராதாநல்லூர், திருமுல்லைவாசல், தொடுவாய் ஆகிய ஊர்களில் எஸ் அண்ட் எஸ் (S & S) கம்பெனி 120 ஏக்கர் பரப்பில் இறால் பண்ணை அமைத்துள்ளது. இதன் உரிமையாளர் எஸ். சந்தானகிருஷ்ணன் என்னும் பார்ப்பனன். (கருவாடு விற்ற காசு நாறுமா என்ன?)

www.tamilarangam.net

சீர்காழியில் பெருந்தோட்டம் பகுதியில் கடற்கரை வரை நல்ல தண்ணீர் கிடைக்கிறது. அங்கே பருத்தி, கரும்பு, நெல் எல்லாம் விளைகின்றன. அங்கு பாக்ஸ்பார்ம், பிஸ்மி, ராமகிருஷ்ணா ஆகிய கம்பெனிகள் 600 ஏக்கர் பரப்பில் இறால் பண்ணை அமைத்து வருகிறது. பெருந்தோட்டத்தை ஒட்டிய அல்லிமேடு பகுதியில் மேக்னா புட் கம்பெனி 520 ஏக்கர் நிலத்தில் இறால் பண்ணை அமைத்து வருகிறது. இவையும் காவிரி நீரிருந்தால் இருபோகம் விளையக்கூடிய நஞ்சை நிலங்கள்.

இன்னும் கொள்ளிடத்திலிருந்து பூம்புகார் வரை நாராயணன், அருண், சூர்யகுமார், N.K. குமார், சுபா, அக்வாபானா, பாக்ஸ் பார்ம், மேக்னா புட்ஸ், பிரானக்ஸ், ஸ்பென்சர் ராமகிருஷ்ணா என்று இறால் பண்ணை பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இவை தவிர இன்னும் செல்வம், திரிபுரசுந்தரி, கோல்டன் ஹார் வெஸ்ட், என்று சிறிதும் பெரிதுமாக புற்றீசல் போல் தோன்றி வருகின்றன. இந்த இறால் பண்ணை முதலாளிகளுடன் போட்டி போட்டும் கூடவே இறால் பண்ணைகளுக்கு நம்பிக்கையும் உத்தரவாதமும் அளிக்கும் வகையில் ஜெயலலிதாவின் உயிர்தோழி சசிகலா திருக்கடையூரில் 600 ஏக்கர் பரப்பில் இறால் பண்ணை அமைக்கிறார். எதிர்கால முதல்வருக்கான போட்டியில் நிற்கும் கருணாநிதியின் மகன் ஸ்டாலின் வேளாங்கன்னி அருகில் 300 ஏக்கர் பரப்பில் இறால் பண்ணை அமைத்து வருகிறார்.

**ஆசைகாட்டி மோசம் செய்யும் இறால் கம்பெனிகள்:**

இறால் பண்ணைகள் அமைக்க முதலில் போதுமான அளவுக்கு நிலம் தேவைப்படுகிறது. இறால் பண்ணை அமைத்து குறுகிய காலத்தில் கொள்ளை லாபம் சம்பாதித்து விடத் துடிக்கும் முதலாளிகள் பணத்தை மடியில் கட்டிக் கொண்டு அலைகிறார்கள். என்ன விலை கொடுத்தும் நிலத்தை வாங்கத் தயங்குவதில்லை. ஏற்கனவே காவிரியின் கடைமடைப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் காவிரியில் நீரில்லாது போனதால் நொடித்துப் போயிருக்கின்றனர். பயிர் செய்ய வழியில்லாமலும், நம்பிப் பயிர் செய்து காவிரி பொய்த்துப் போனதால் கடன் பட்டு கடனடைக்க வழியில்லாமலும் கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட விவசாயிகள் தான் இறால் பண்ணை முதலாளிகளின் முதல் குறி.

உள்ளூரில் இதற்கென சில தரகர்களை உருவாக்கி வைத்துக் கொண்டு அவர்கள் மூலம் பலவாறாக பேசி ஆசை காட்டுகிறார்கள். ''இதைக் காட்டிலும் நல்ல விலைக்கு எந்த விவசாயியும் உன் நிலத்தை வாங்கப் போவதில்லை விற்காமல் சொந்தமாகப் பயி

www.tamilarangam.net

ரிட்டு வாழ்ந்து விட முடியுமா? என்றால், அது கனவுதான். ஏனென்றால் இனிமேல் காவிரியில் ஒரு நாளும் தண்ணீர் வரப் போவதில்லை. வேறேன்னதான் யோசனை'' என்று பணத்தை கட்டாகக் காட்டிப் படிய வைக்கிறார்கள். ''பக்கத்து நிலத்துக்காரர்களும் கொடுத்து விட முடிவு செய்து விட்டார்கள். நீ மட்டும் இடையில் துண்டு நிலத்தை வைத்துக் கொண்டு என்ன செய்து விட முடியும்'' என்று நயவஞ்சகமாய் ஒவ்வொருவரிடமும் மற்றவர்களைப் பற்றி பொய் சொல்லி ஏமாற்றுகிறார்கள். மேலும் இப்போது நிலம் கொடுப்பவர்களுக்கு இறால் பண்ணையில் கட்டாயம் வேலை போட்டுத் தருகிறோம் என்று பொய்யான வாக்குறுதி தருகிறார்கள்.




ஊரில் முக்கியஸ்தர்களை கூட்டி வைத்துப் பேசி பொதுவாக ஊருக்கு குடிநீர் வசதி செய்து தருவதாகவும், கோயில் கட்டித் தருவதாகவும் பள்ளிக்கூடம் கட்டித் தருவதாகவும் வாக்குறுதி தருகிறார்கள். இப்படி பல வழிமுறைகளில் பேசி உள்ளூர் தரகர்கள் நிலங்களை வளைத்துப் போட்டு வருகின்றனர். அதற்கு இறால் கம்பெனிகள் தாராளமான கமிஷன் தருகின்றன. இறால் கம்பெனிகள் நிலத்தின் விலையை நான்கு ஐந்து மடங்குகளாக உயர்த்தி விடுவதால் வேறு விவசாயிகள் யாரும் நிலத்தை விற்கவோ வாங்கவோ முடியாத நிலைமை ஏற்பட்டு வருகிறது. ஒரு செண்ட் நிலம் ரூ.30 என்றிருந்தது இப்போது ரூ.150, ரூ.180 என்று ஏறிவிட்டது. சில இடங்களில் ரூ.300 வரை கொடுத்திருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கம்பெனிகாரர்களின் வாக்குறுதிகளும், தரகர்களின் நைச்சிய மான பேச்சும் நிலம் கைமாறும் வரைதான் அதன் பிறகு உள்ளூரில் ஆள் செல்வாக்குடன் கூடிய சில பிரமுகர்களுக்கு காண்டிராக்ட் கொடுப்பது போன்ற சலுகைகள் செய்து தம் பக்கமாய் வைத்துக் கொள்கிறார்கள. பிறகு அவ்வளவுதான் உள்ளூர் அடியாள் பலம், கம்பெனி முதலாளிகளின் பணபலம் அரசியல் கட்சிக்காரர்கள் மூலம் போலீசு பலம் இவற்றைக் கொண்டு எந்த எதிர்ப்பையும் சமாளிக்கத் தயாராகி விடுகிறார்கள்.

இப்படி ஏதாவது வழியில் விவசாயிகள் வேரிழந்து விரட்டப் பட்டு விடுகிறார்கள். நெய்தலூர் வாசல் எனும் ஊருக்கருகில் பிரா னக்ஸ் கம்பெனி 250 ஏக்கர் நிலத்தை வெறுமனே வாங்கி பொட்ட லாக போட்டு வைத்திருக்கிறது. எதிர்காலத்தில் பயன்படுத்தலாம் என்ற எண்ணத்துடன் கிடைத்ததை விடுவானேன் என்று வாங்கிப் போட்டுள்ளனர். அந்த நிலத்தில் மக்களை ஆடுமாடு மேய்க்கவும் அனுமதிப்பதில்லை. வெறுமனே நிலத்தை இழந்து விவசாய வேலையும் இழந்து இறால் கம்பெனி வேலை என்றும் எதுவுமில் லாமல் வெளியூருக்கு பிழைக்க ஓடிக் கொண்டிருக்கின்றனர் மக்கள். இதே போல் வேலைவாய்ப்பு வாக்குறுதியளித்துத் தொடங்கிய சிறீ ராம் கம்பெனி உள்ளூர் மக்களுக்கு எந்த வேலையும் தராமல் குறைந்த கூலிக்கு கேரளாவிலிருந்தும் ஆந்திராவிலிருந்தும் ஆட் களை கொண்டு வந்து குடியமர்த்திக் கொண்டு வேலை பார்க்கிறார் கள்.

## இறால் வளர்ப்பு பண்ணைகள் அமைத்தல்

இப்படி நிலங்கள் வாங்கப்பட்டது தான் தாமதம் மாட்டு வண் டியும் சைக்கிள்களும் மட்டும் சென்று கொண்டிருந்த கிராமத்துச் சாலைகளில் லாரிகள், டிரக்குகள், புல்டோசர்கள், பொக்லிங் எனப் படும் மண்வாரி இயந்திரங்கள் ஜீப்புகள் என்று அடிக்கடி போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கின்றன. புதுப்புது கட்டிடங்கள் முளைத்து வருகின்றன. பெரிய அளவில் குளங்கள், வடிகால் வாய்க் கால்கள் வெட்டப்படுகின்றன. குளங்களில் நீரைக் கொண்டு வந்து நிரப்ப வெளியே சிமெண்டு குழாய்கள், பம்புசெட்டுகள் பொருத் தப்படுகின்றன. குளத்தில் கடல்நீரை நிரப்பியவுடன் இறால் குஞ்சு களை விட்டு நூற்றுக் கணக்கான சோடியம் வாயு பல்புகள் போடப் படுகின்றன. அவ்வளவுதான் பணம் முளைவிடத் தொடங்கி விடுகி றது.

வாழ்வில் ஒளியில்லாமல் மீனவக் குப்பங்களையும் விவசாயக் குடியிருப்புகளையும் இருளில் மூழ்கடித்துவிட்டு சோடியம் வாயு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிச்சத்தில் இறால் மீன்கள் ஊட்டத்துடன் வளருகின்றன. வெளி நாட்டு முதலாளிகளின் சுவையான உணவுக்காக.

**விளைநிலத்தை உப்பும் உவருமாக்கும் இறால் பண்ணைகள்.**

இறால் மீன் வளர்ப்புக்கு குளத்திலுள்ள நீரை வாரம் ஒருமுறை மாற்ற வேண்டும். மாற்றப்பட்ட புதிய நீரில் இறால்களுக்கான உணவு என்றும் நோய் தடுப்பு மருந்துகள் என்றும் பலவகையான இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பிறகு ரசாயனங் கலந்த நீரை அப்படியே வெளியேற்றி விடுகின்றனர். வெளியேற்றப்படும் நீரை மீண்டும் கடலுக்கனுப்ப வெட்டி வைத்திருக்கும் வடிகால் வாய்க்கால்கள் சாதாரணமாகவே கடல் அலைகளினால் தூர்ந்து போய்விடுகின்றன. தூர் எடுத்து வாய்க்காலை சரி செய்வதற்கு பதிலாக பாசன வாய்க்கால்களிலேயே வடித்து விடுகின்றனர்.

மேலும் ஒவ்வொரு மூன்றுமாதத்துக்கும் ஒருமுறை அதாவது ஒரு மகசூல் முடிந்தவுடன் குளத்தை கொத்தி காயப் போடுகின்றனர். அப்போது பள்ளங்களில் நிற்கும் தண்ணீரில் இருக்கும் பழைய குஞ்சுகளை அழிப்பதற்காக ஒருவகை நச்சுகலந்த இரசாயனத்தை தெளிக்கின்றனர். மீண்டும் புதிய தண்ணீரை நிரப்பிய உடனும் தண்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணீரில் உள்ள பிற மீன் மற்றும் பூச்சி முட்டைகளையும், குஞ்சுகளையும் அழிப்பதற்காக அதே நஞ்சை மீண்டும் தெளிக்கின்றனர். அதற்கு பிறகு வேறு பல இரசாயனங்களை தெளித்துத்தான் நீரை இறால் வளர்ப்புக்கு தயார் படுத்துகின்றனர். இப்படிப்பட்ட நச்சுத்தன்மை கலந்த நீரைத்தான் மீண்டும் கடலில் வடித்து விட்டு மாற்றிக் கொண்டிருக்கின்றனர். இந்த நச்சு நீர் வடிக்கப்பட்ட வாய்க்காலில் மீண்டும் பாசன நீர் வரும்போது நீரும் நிலமும் பழுப்பு நிறமாக மாறிவிடுகிறது. இந்த நீரைப் பாய்ச்சுவதற்கு விவசாயிகள் தயங்குகின்றனர். கம்பெனிக் காரர்களிடம் கிராமமக்கள் முறையிட்டாலும் அவர்கள் பொருட்டாய் கொள்வதில்லை. இந்த தண்ணீர் நிலத்தில் மட்டுமில்லை கடலில் கலந்தாலும் கடல் மீன்கள் அழிவது திண்ணம். வாரம் ஒருமுறை என்று வருடக்கணக்கில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்பிலிருந்து நச்சு நீர் வடிக்கப்பட்டால் கடலேயானாலும் பாதிப்பில்லாமல் போகுமா?

ஒவ்வொரு இறால் பண்ணையை சுற்றிலும் கொஞ்சம் கொஞ்சமாக இரசாயனம் கலந்து உப்புநீர் ஊறிஊறி பரவி பக்கத்து நிலமெல்லாம் உவரும் களருமாக போய் விடுகிறது. சீர்காழி பகுதியில் எஸ். அண்டு எஸ் கம்பெனி அப்படி சுற்றிலும் உவராகிப் போன நிலத்தையும் குறைந்த விலைக்கு வாங்கிப் போட்டு விட்டது. இப்படித்தான் இனி எல்லா இறால் பண்ணைகளும் நடக்கப் போகிறது. முதலில் அம்மா! தாயே! என்று இருக்க இடம் கேட்டான். பின்னர் படுக்க பாய் கேட்ட கதையாக இறால் கம்பெனிகளின் ஆதிக்க எல்லை நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. இனிமேல் இன்னும் அசுர வேகத்தில் பரவும் என்பது நிச்சயமே.

இதற்கெல்லாம் மேலாக ஒரு முக்கியமான விஷயம் என்னவெனில் இந்த இறால் பண்ணைகளில் (ஒரு குளத்தில்) 5 ஆண்டுகள் வரைக்கும்தான் வளர்க்க முடியும். அதன் பிறகு பக்கத்தில் வேறு புதிய இடத்திற்கு மாற்ற வேண்டும் என்பது கட்டாயம். ஏனென்றால் ஐந்தாண்டுகள் கழிந்த பின் அந்த மண் எதற்கும் லாயக்கற்றதாக போய்விடுகிறது. மீண்டும் மீண்டும் ஒரே குளத்தில் இறால் வளர்த்தால் முதலாண்டில் ஒரு ஹெக்டேருக்கு 6 டன்கள் கிடைத்தது அடுத்தடுத்து ஆண்டுகளில் 5 அல்லது 4 என்று குறைந்து விடுகிறது. ஒரு இறாலின் எடை முதலாண்டில் ஒரு இறால் 200 கிராம் வரை இருப்பது 5-ம் ஆண்டில் 35 அல்லது 25 கிராம் என்றாகி விடுகிறது. ஆகவே 5 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் பண்ணைகளை பக்கத்து வயல்களுக்கு மாற்றி விடுவார்கள். இப்படியே போனால் எதிர்காலத்தில் என்னாகும் என்று எண்ணிப் பாருங்கள். இன்று முப்பதாயிரம் ஏக்கர் என்பது அடுத்த ஐந்தாண்டில் 60 ஆயிரம் ஏக்கர் பண்ணையாகிவி




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டும். அப்போது அவற்றைச் சுற்றிலும் பாதிக்கப்படும் நிலங்கள் இன்னும் பல ஆயிரம் ஏக்கர்கள். ஆகவே வரவிருக்கின்ற இறால் பண்ணைகளையும் சேர்த்தால் வரும் நாளில் பல லட்சக்கணக்கான விளை நிலங்கள் ஒன்றுக்கும் உதவாத களர்நிலமாக போவது தவிர்க்க முடியாததாகும். ஆகவே இந்த இறால் பண்ணைகளை அனுமதித்திருப்பது என்பது ஒலைக் கூரையில் கரையான்களை மேய விடுவது போலத்தான். மொத்தத்தையும் நாசம் செய்யாமல் விடாது.

இப்படி ஒரு ஐந்தாண்டுகள் இறால் வளர்த்து முடித்து விட்டுச் சென்ற இடம் வெறும் இரசாயனக் கழிவுகள் நிரம்பிய சகதியாகி மாறிவிடுவதால் அதில் இனி எக்காலத்திலும் புல்பூண்டு கூட முளை விட முடியாது என்பதையும் சேர்த்து சிந்தித்துப் பாருங்கள். தஞ்சை



உப்பும் உவரும், களரும் பாலையுமாக மாறும் என்பது கற்பனையா? மிகைப்படுத்தலா?

## நிலத்தடி நீரை நஞ்சாக்கும் இறால் பண்ணைகள்:

இறால் பண்ணைக் குளங்கள் பெரும்பாலும் கடல் மட்டத்திலிருந்து ஐந்து அல்லது ஆறு அடி உயரத்தில் அமைக்கப்படுகிறது. ஆகவே கடல் நீர் நிலத்தில் தாராளமாய் இறங்குகிறது. நிலத்தடி நீரில் கலந்து கறைந்து தண்ணீரை உப்பு நீராகவும் உவர்ப்பு நீராகவும் மாற்றிவிடுகிறது. பூம்புகார் அருகில் உள்ள நெய்தல் வாசல், மேலையூர் பகுதிகளில் 12 அடியிலிருந்து 22 அடிக்குள் நல்ல தண்ணீர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடைத்து வந்தது. இப்போது எல்லாமும் உவர்ப்பு நீராக மாறிவிட்டது. நிலம் உவராவதைப் போலவே தான் நிலத்தடிநீர் உவர்ப்பாவதற்கும் எல்லை எதுவும் கிடையாது. பல்லாயிரக்கணக்கான ஹெக்டேர் நிலப்பரப்பில் நிலத்தடி நீர் இப்போதே உபயோகமின்றிப் போய்விட்டது. எதிர்காலத்தில் இந்த நிலை தொடர்ந்தால் நினைத்துப் பார்க்கவே அச்சுறுத்துவதாக இருக்கிறது. காவிரி நீரில் புழங்கிய மக்கள் குடிக்க தண்ணீருக்காக மைல் கணக்கில் நடக்க வேண்டி வரும்.

**விவசாயம் எனும் தொழிலுக்கே உலைவைக்கும் இறால் பண்ணை:**


இறால் வளர்ப்புத் தொழிலில் ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள முதலாளிகளுக்கு நல்ல சுவையுள்ள எளிதில் செரிக்கக் கூடிய புரதம் நிறைந்த உணவு கிடைக்கிறது. ஏற்றுமதி செய்யவும், இறால் பண்ணை முதலாளிகளுக்கு வெளிநாட்டு முதலாளிகள் தரும் அந்நிய செலாவணிப்பணம் கிடைக்கும். இன்ன பிற தரகர்களுக்கும் லஞ்சமும் கமிஷனும் கிடைக்கிறது. விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் தான் எல்லா கஷ்டமும் நஷ்டமும். ஆண்டாண்டு காலமாக உணவளித்து காத்து வந்த நிலத்தை இழக்க வேண்டும். நிலத்தடி நீரை இழக்க வேண்டும். கடல்மீனை இழக்க வேண்டும். இதன் விளைவாய் நமது கலாச்சார வாழ்வையே இழக்க வேணடும். பிறகென்ன ஊரைவிட்டே பிழைப்பு தேடி நகரங்களுக்கு ஓடவேண்டும். பட்டிக்காட்டான் என்ற பட்டத்துடன் நகரத்து வீதிகளில் எதுவும் தெரியாத முட்டாளாக நிற்க வேண்டும். இதுவும் அதிகப்படுத்தப்பட்ட கற்பனை இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு இன்றிருக்கும் எதார்த்த நிலவரம் கூட மிகைப்படுத்தப்பட்டதாகத்தான் உங்களுக்குத் தோன்றியிருக்கும். இன்னும் நிலமும் நீரும் கெட்டுப் போவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் அதனால் ஏற்படும் பருவகால மாறுபாடுகள், சில ஆண்டுகள் வறட்சி, சில ஆண்டுகள் வெள்ளம் போன்ற நிலைமைகளை எல்லாம் சேர்த்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. நிலமும் கெட்டுப் போய் நிலத்தடி நீரும் கெட்டுப் போய் விட்டால் அங்கு புல் பூண்டும் முளைக்காது. பிறகு எப்படி விவசாயம் செய்வது. கண்ணுக் கெட்டிய தூரம் வரை பொட்டலாக கிடக்கும் நிலப்பரப்பை கிராமம் என்று கூட சொல்ல முடியாது. விவசாயம் என்ற தொழிலே அங்கே இருக்கமுடியாது என்றாகிவிடும். அதனால்தான் சொல்கிறோம் இறால் மீன் முதலாளிக்குத் தான் சுவையான புரதம் நிறைந்த உணவுப் பொருள். ஆனால் ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இறால் என்பது நம் வாழ்வைக் குடிக்கும் ஒரு விஷப் பூச்சியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறால் பண்ணை கட்டுமான பணிக்கு எதிராக தென்னாம் பட்டினம் மக்கள் நடத்தும் முற்றுகைப் போராட்டம்.



## இறால் பண்ணை எதிர்ப்புப் போராட்டங்கள்:

இறால் பண்ணைகளினால் எதிர்கால வாழ்க்கையில் ஏற்படப் போகும் விளைவுகளை விவசாயிகள் இன்று உணர்ந்து கொண்டு வருகிறார்கள். அது ஏன் நம் மேல் இப்படி வலிய திணிக்கப்படுகிறது? ஏன் நம்மை கம்பெனி முதலாளிகளோடு சேர்ந்து கொண்டு அரசாங்கமும் நம்மை ஏமாற்றுகின்றது? என்றெல்லாம் ஒரு வேளை மக்கள் இன்னும் உணராமல் இருக்கலாம் எனினும் விளைவுகளை புரிந்து கொண்ட மாத்திரத்திலேயே இறால் பண்ணைகளை எதிர்த்துப் போராடத் தொடங்கி விட்டனர். இத்தனை காலமும் தமது வாழ்வின் தரத்தையும் பற்பல உடமைகளையும் ஏதேதோ காரணங்களுக்காக கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து வந்தவர்கள். இன்று இறால் பண்ணைகளிடம் தங்களின் உயிர் நிலையை இழந்து விட்டோம் என்பதை உணர்ந்து கொள்ள அவர்களுக்கு அதிக சிரமமிருக்கவில்லை. தஞ்சை நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கிளில் இறால் பண்ணை அமைக்கும் முயற்சிகளுக்கெதிராக கிராம சுயாட்சி இயக்கம் என்னும் அமைப்பில் திரண்டு சட்டபூர்வமான வழிகளில் விவசாயிகள் போராடி வருகின்றனர். வினோபா பாவேயின் அடியொற்றி கீழ்வெண்மணி சம்பவக் காலத்தில் தஞ்சைப் பகுதிகளில் தொடங்கப்பட்டது உழவனின் நில உரிமைக்காண இயக்கம். சர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வோதய தலைவர் எஸ். ஜகந்நாதன் என்பவர் தலைமையில் செயல் பாடுகளின்றி கிடந்த இந்த இயக்கம் இப்போது இறால் பண்ணைக ளுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடி வருகிறது. இந்தப் பிரச்சனைக் கென்றே அவர்கள் தொடங்கியிருக்கும் இயக்கம்தான் கிராம சுயாட்சி இயக்கம்.

நமது பாரம்பரியத்தையும் வேளாண்மைக்கேற்ற சுற்றுச் சூழ லையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து மக்களிடம் பரவலாக பிரச்சாரம் செய்து வருகின்றனர். சட்டபூர்வ மான வழிகளில் பெரிய அளவில் மக்கள் குறிப்பாக பெண்கள் பங்கு கொள்ளும் உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டஙகள் மற்றும் பிரச்சா ரத்தின் மூலம் மக்கள் இறால் பண்ணை பற்றி எதிர்ப்புணர்வு பெற்று வருகிறார்கள். சீர்காழி பகுதியில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவிருந்த இறால் பண்ணைகளை மக்களை திரட்டிப் போராடி தடுத்து நிறுத்தியுள்ளனர். குறிப்பாக பெரும் தோட்டம் பகுதியில் பாக்ஸ்பார்ம், பிஸ்மி, ராமகிருஷ்ணா ஆகிய கம்பெனி கள் 600 ஏக்கர் பரப்பில் அமைக்க நிலத்தை வாங்கி குளத்தையும் வெட்டத் தொடங்கிவிட்ட பின்னரும் கிராமசுயாட்சி இயக்கத்தினர் மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தினர். எழுச்சி ஊர்வலத்திற் குப் பிறகு நேரடியாக ஸ்தலத்திற்குச் சென்று குளம்வெட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேலைகளை தடுத்து நிறுத்தினர். வேலையாட்களையும் இயந்திரங் களையும் வெளியேற்றினர். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சியர் வந்து பார்த்துவிட்டு அப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளார்.

அல்லிமேடு பகுதியில் மேக்னாபுட் கம்பெனி 520 ஏக்கர் நிலத் தில் இறால் பண்ணை வேலையை தொடங்க வெளியூர்களிலிருந்து 250 கூலி ஆட்களையும் பாதுகாப்புக் கென்று போலீசையும் அழைத்து வந்து நிறுத்திக் கொண்டு வேலை ஆரம்பித்தனர். பெருந் தோட்டம் பகுதியிலிருந்து 1000 பேர்களை திரட்டிக் கொண்டு அல் லிமேடு சென்று கிராம சுயாட்சி இயக்கத்தினர் வெளியூர் ஆட்கள் வேலையில் ஈடுபடுவதை தடுத்து நிறுத்தினர். திருப்பி அனுப்பினர். இதனால் ஆத்திரமடைந்த போலீசு 12 பெண்கள் உட்பட 15 பேர்மீது 307 பிரிவின் கீழ் கொலை முயற்சி வழக்கு தொடுத்தனர். மத்திய சிறையிலடைக்கப்பட்டு பின்னர் அவர்கள் ஜாமீனில் வெளிவந்துள் ளனர். இதனிடையில் வட்டாட்சியர் வந்து வேலைகளை தற்காலிக மாக நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளனர்.

இந்தப் போராட்டங்களை கண்டு அரண்டுபோன பிரானக்ஸ், கம்பெனி நிலத்தை வாங்கிப் போட்டு விட்டு வேலையைத் தொடங் காமலேயே உள்ளனர். இதே போல் ராதா நல்லூரிலும், கொடைகார மூலையிலும் குளம் வெட்டும் வேலைகளை தடுத்துள்ளனர். இன் னும் காட்டூர் தாண்டான்குளம், பழைய பாளையம் கோனயாம்பட் டினம், தென்னாம்பட்டினம் ஆகிய ஊர்களிலும் போராட்டம் நடத்தி 1000 ஏக்கர் பரப்பில் அமைய இருந்த இறால் பண்ணைகளை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

புதுக்குப்பம், கடைக்காடு, நாயக்கர் குப்பம், ஆகிய பகுதிக ளில் மீனவர்கள் தங்கள் நிலத்தை முதலில் இறால் பண்ணைக்கு கொடுத்து விட்டவர்கள் இப்போது கேடுகள் பற்றி அறிந்து கொண் டதும் இறால் பண்ணை அமைப்பதை தடுத்து வருகின்றனர்.

## தஞ்சையில் மட்டுமல்ல இந்தியாவெங்கும் இறால் பண்ணைகளும் எதிர்ப்பு போராட்டங்களும்

இறால் பண்ணைகள் தஞ்சையில் முதன் முதலாய் தொடங்கியி ருக்கிறார்கள் என்று எண்ணி விடாதீர்கள். இந்தியாவின் இன்னும் பல இடங்களிலும் வெளி நாடுகள் பல சுற்றிலும் இறால் பண்ணை கள் ஏற்கனவே நடத்தப் படுகின்றன. அது ஏற்படுத்தும் அழிவுகள் நம் போன்ற சாதாரண மக்களுக்கத் தான் புதியதேயொழிய இந்திய அரசாங்கத்திற்கும் இன்னும் பிற ஓட்டுக் கட்சித் தலைவருக்கும் ஏற்கனவே தெளிவாகத் தெரியும் தாய்லாந்து, ஈக்வேடார் போன்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளே மொத்தமாக குட்டிச்சுவராகி போனதற்கு இறால் பண்ணைகள் முக்கிய காரணமாகியிருந்திருக்கிறது. இறால் கம்பெனி முதலாளிகளும் அவர்களின் நேரடி ஏஜெண்டாக செயல்படும் மயிலாடுதுறை காங்கிரசு எம்.பி. மணிசங்கர் ஐயரும் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு தான் மக்களிடம் பித்தலாட்டம் செய்கிறார்கள். இது ஒரு புதிய தொழில் லாபம் கொழிக்கக் கூடியது. எவ்வித பாதிப்புகளும் கிடையாது என்று பசப்புகிறார்கள்.

## ஒரிசாவின் கடற்கரையை அரித்துத் தின்னும் இறால் மீன்கள்.

ஒரிசா மாநிலத்திலும் மேற்கு வங்காளத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் ஏராளமாக இறால் பண்ணைகள் அமைந்திருக்கிறார்கள். ஒரிசாவின் உலகப்புகழ் பெற்ற சில்கா ஏரி மூன்று மாவட்டங்களை சூழ்ந்து சுமார் 900 கி.மீ. சுற்றளவு கொண்டது. அந்த உப்பு ஏரியில் இறால் மீன்கள் இயற்கையாகவே அதிகம் காணப்படுகின்றது. அதையே இறால் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டு சில்கா ஏரியைச் சுற்றிலம் பல்லாயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அங்கே டாடா நிறுவனம் பிஜீபட்நாயக் அரசோடு கூட்டாக சேர்ந்து ரூ. 24 கோடியில் இறால் பண்ணைகளை அமைக்கத் திட்டமிட்டனர். இரண்டாண்டு காலம் அப்பகுதி மீனவர்கள் பல வழிகளில் போராட்டங்களை நடத்தியதன் விளைவாக உயர்நீதி மன்ற வழக்கில் பல்லாயிரக்கணக்கன குடும்பங்களின் வாழ்வுரிமை பாதிக்கப்படுகிறது என்பதை ஏற்றுக்கொண்டு அந்தத் திட்டத்தை தடைசெய்து தீர்ப்பளித்தது உயர்நீதி மன்றம். ஆனால் அதற்குப் பிறகு 1991-ல் அரசு கொண்டு வந்த புதிய மீன்பிடிக் கொள்கையை சாதகமாக்கிக் கொண்டு பல நிறுவனங்கள் சில்கா ஏரியின் கரையோரப் பகுதியில் 80,000 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் பண்ணைகளை அமைத்துள்ளன. இதனால் வாழ்விழந்த மீனவர்கள் இறால் பூச்சிகள் தான் எங்கள் வாழ்வை அழித்துவிட்டன என்று குமுறுகிறார்கள். மேலும் இந்தப் புதிய இறால் கொள்ளையர்கள் எஞ்சிய மீனவர்களின் கட்டுமரங்களை திருடிச் சென்றும் கட்டுமரங்களை கொண்டு வரவும் எடுக்கவும் கரையில் வழிவிடாமல் தடுத்தும் மறைமுகமாய் நிர்பந்தம் கொடுத்து விரட்டிவிடுகின்றனர்.

வெற்றிகரமாக இறால் பண்ணைகளை அமைத்து விட்ட தைரியத்தில் ஒரிசாவின் ஏனைய பிற கடற்கரையோரப் பகுதிகளின் சுற்றுச்சூழலை பாழாக்கும் வகையில் தாஜ் மற்றும் ஒபராய் ஓட்டல் நிறுவனங்கள் ஐந்து நட்சத்திர ஓட்டல்களை கட்டிக் கொள்ள கடற்கரை நெடுகிலும் 2227 ஏக்கர் நிலத்தை அரசு அவர்களுக்கு குத்தகைக்கு விட்டிருக்கிறது. மேலும் அந்த கடலோரங்களில் உள்ள 5 லட்சத்துக்குமதிகமான சவுக்கை மற்றும் முந்திரிமரங்களை வெட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடவும் திட்டமிட்டனர். இந்த சதித்திட்டங்களின் உள்நோக்கத்தையும் அதன் எதிர்கால விளைவுகளையும் உணர்ந்த மக்கள் அரசின் அயோக்கித்தனத்தை அம்பலப்படுத்திப் போராடவே தற்காலிகமா அரசு இத்திட்டத்தை கை விட்டிருக்கிறது.

இதே போல் ஆந்திரத்தின் நெல்லூர் மாவட்டப் பகுதிகளிலும் மேற்கு வங்கத்தின் சுந்தரவனக் காட்டுப் பகுதிகளிலும் கடலோரங்களில் இறால் பண்ணைகளை அமைத்து வருகின்றனர். இன்னும் இந்தியா முழுவதிலும் கடலோரப் பகுதிகளில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் இறால் பண்ணைகளை அமைப்பதற்கு அரசு சலுகைகளும் மானியங்களும் கொடுத்து ஊக்கப்படுத்தி வருகிறது. இடம் எதுவானாலும் இறால் பண்ணைகள் ஏற்படுத்தும் விளைவுகளும் விபரீதங்களும் ஏதோ மாதிரியானவைதான். ஆகவே இறால் பண்ணை அமைய வழிவிட்டு விட்ட மக்கள் எல்லோருமே, ''ஏமாந்து விட்டோம்! நம்மை பணத்தாலடித்து வீழ்த்திவிட்டார்களே! இந்த இறால் பூச்சிகளை நம் வீட்டைச் சுற்றிலும் வளர நாமே அனுமதித்து விட்டோமே தாயை விற்று நாயை வாங்கிய கதையாகிப் போனதே'' என்று வேதனையும் சோகமும் கொள்கின்றனர்.

**வெளிநாடுகளில் இறால் பண்ணைகள்:**

மேற்கத்திய முதலாளிகளின் தேவைக்காக தென் அமெரிக்கா நாடுகளிலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் இறால் பண்ணை வளர்க்கப்படுகிறது. அக்வா ஸ்டார் கார்ப்பொரேஷன், மிட்சுமிஷி, யுனிகார்ட் போன்ற பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் அங்கெல்லாம் நேரடியாக மூலதனமிட்டு இறால் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளன. அங்கெல்லாம் இறால் பண்ணை ஏற்படுத்தியிருக்கும் விளைவுகள் மிகவும் பயங்கரமானவை. தாய்லாந்து நாட்டில் கடந்த முப்பதாண்டுகளில் 10 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் சூழ்ந்திருந்த காடுகள் இறால் பண்ணைகளால் சரி பாதியாக குறைந்து விட்டன. அந்த நாட்டின் மேற்கு கடற்கரை முழுவதிலுமிருந்த மீனவர்கள் தங்கள் பாரம்பரியத் தொழிலோடு தங்கள் வாழ்க்கையையும் இழந்து விட்டனர்.

தென்னமெரிக்காவில் ஈக்வேடார் நாட்டின் அடர்ந்த காடுகள் 80-க்கு பிறகு வந்த இறால் பண்ணைகளால் முழுவதுமாய் அழிந்து போயின. அந்த நாட்டு மக்கள் ''எங்கள் எதிர்ப்புகளை உறுதியாக நிலை நாட்டாமல் விட்டு விட்டதால் நர்ங்கள் அழிந்து போனோம்'' என்று தங்களின் அனுபவங்களை சொல்கின்றனர்.

இப்படி எத்தனை நாட்டு மக்கள் செத்து மடிந்தாலும், எவ்வளவு நீரும் நிலமும் பாழானாலும் ஏகாதிபத்திய முதலாளிகள் தங்களின் சுவையான உணவான இறாலை இழக்கத் தயாராயில்லை.

www.tamilarangam.net

**இறால் பண்ணை மட்டுமல்ல இன்னும் எத்தனையோ நாசகாரத் திட்டங்கள்:**

இறால் பண்ணைகளைப் போலவே இன்னும் பல வழிகளில் சுற்றுச் சூழலை பாதிக்கும் இன்னும் பல திட்டங்களை அரசே முன்னின்று செயல்படுத்துகிறது. சமூகக் காடுகள் திட்டம் என்ற பேரில் காகித ஆலைகளின் தேவைக்காக இயற்கை காடுகளை அழித்தும் நல்ல விளைநிலங்களையும், யூகலிப்டஸ் என்னும் தைல மரங்களையும் மற்றும் ஊசியிலை மரவகைகளையும் வளர்க்கின்றனர். இந்தியாவில் எல்லாமாநிலங்களிலம் நமது தமிழ் நாட்டிலும் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் சமூக நலக் காடுகள் வளர்க்கப்படுகின்றன. இவ்வளவு மரங்கள் நிலத்தின் ஆழத்திலிருந்தும் நிலத்தடி நீரை உறிஞ்சிக் குடித்து விடுவதோடு காற்றிலும் ஈரப்பதமில்லாமல் செய்து பருவ மழைகளையே கூட கெடுத்து மாற்றி வருகிறது.

நம் போன்ற ஏழை நாடுகளில் கிடைக்கும் மலிவான நிலத்தின் மதிப்பு, அந்நிய செலாவணியின் பற்றாக்குறை மக்களின் மலிவான உழைப்பு சக்தி, மரங்கள் வளர்வதற்கு உகந்த வளமான மண்ணும் நிலத்தடி நீரும், இருப்பது ஆகிய காரணங்களால் பன்னாட்டு கம்பெனிள், நிதிநிறுவனங்களின் மூலமும் அரசின் மூலமும் நிர்பந்தம் கொடுத்தும் மானியம் போன்ற சலுகைகள் கொடுத்தும் இவ்வகை மரங்களை வளர்க்கச் செய்கின்றனர்.

இதுபோன்று இன்னும் எத்தனையோ வழிகளிலும் நம்நாட்டின் மக்களும் பிற உயிரினங்களும் உயிர் வாழும் சுற்றுச் சூழலைக் கெடுத்து நாசமாக்குகின்றனர். நம்நாட்டின் வளங்களை சூறையாடுகின்றனர். அணுஉலைக் கழிவுகளையும், இரசாயன ஆலைகளின் பலவகை நச்சுக் கழிவுகளையும் கொண்டு வந்து நமது கடலில் கொட்டி வருகின்றனர் பன்னாட்டு கம்பெனிகள்.

காப்பி, தேயிலை, ரப்பர் என்று மலைத் தோட்டப்பயிர் வளர்க்கவும் இன்னும் எத்தனையோ தேவைகளுக்காகவும் லட்சக்கணக்கான ஏக்கர் காடுகளை அன்றாடம் அழித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஏகாதிபத்திய நாடுகளின் பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் நமது நாட்டின் தொன்மை வாய்ந்த வளங்கள் எதையும் விட்டு வைப்பதில்லை. இந்த வளங்களை சுவீகரித்து கொண்டு விடுவதோடு இல்லாமல் இனியும் அவ்வித வளங்கள் உண்டாக வழியில்லாதவாறு துவம்சம் செய்து அழித்து விடுகிறார்கள் என்பது ஏகாதிபத்தியவாதிகளின் குரூர புத்தியை உணர்த்துகிறது.

ஆகவே அப்படிப்பட்ட குரூர புத்தியுடைய நபர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டது தான் இறால் பண்ணைத் திட்டம் என்றால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதை எதிர்த்து முறியடித்திட வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் புரிந்து கொள்ள முடியும். ஏகாதிபத்தியங்களின் நோக்கங்களை அதனுடைய ஒவ்வொரு திட்டத்திலும் அந்தந்த துறைகளிலுமே எதிர்த்து முறியடிக்க வேண்டுவது அவசியமாகும். அப்படிப் பார்க்கும் போது இறால் பண்ணை அமைக்கும் அவர்களது திட்டங்களை செயல்படுத்த விடாமல் மக்கள் ஒன்று சேர்ந்து போராடி முறியடித்திட வேண்டும். அதே சமயம் அப்படி ஏதோ ஒரு துறையில் முறியடித்துவிட்டால் போதுமானதில்லை. நமது வளங்களையும் சுற்றுச் சூழலையும் சூறையாடி அழிக்கும் அதன் எல்லாத் திட்டங்களையும் முறியடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே பிற திட்டங்களை எதிர்த்துப் போராடும் மக்களோடு நமது போராட்டங்களை ஒன்றிணைக்க வேண்டும். ஏகாதிபத்தியவாதியின் சதித் திட்டங்களனைத்தையும் அதனை நயவஞ்சகமாய் நம்மிடையே செயல்படுத்தும் அவர்களின் எடுபிடி ஏஜெண்டுகளையும், இடைத் தரகு வேலை செய்வோரையும் ஒட்டு மொத்தமாக கிள்ளி எறிய வேண்டும்.

நாட்டு மக்களிடம் இப்படிப்பட்ட ஒருங்கிணைப்பு ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்கு இந்திய அரசும் அனைத்தையும் செய்கிறது. இப்போதும் இறால் பண்ணைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தி ருக்கும் மக்கள் போராட்டத்தை திசை திருப்பி மழுங்கடிக்கவும் மீறி வருபவனவற்றை நசுக்கவும் என்ன செய்யலாம் என்கிற நோக்கத்தில் இறால் பண்ணைகளின் விளைவுகளையும் பாதிப்புகளையும் கண்டறியும்படி மத்திய அரசு ஒரு கமிஷன் அமைத்திருக்கிறது. கமிஷனின் முடிவுப்படி அரசாங்கம் நடக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் அரசின் விருப்பத்தையறிந்து அதற்கேற்றவாறு அறிக்கை தயாரித்து தருவது என்பது இப்படிப்பட்ட கமிஷன்கள் அனைத்துக்குமே எழுத்திலேறாத ஒப்பந்தமே. ஆகவே கமிஷன் அறிக்கையை காட்டியே இறால் பண்ணைத் தொழிலை நியாயப்படுத்தவே அரசு முயற்சி செய்யும். ஆகவே அதற்குப் பின்னும் நமது போராட்டத்தை நீட்டிக்க நாம் தயாராக வேண்டும்.

**இன்று இறால் பண்ணை அமைப்பதை ஆதரிப்பவர்கள் இதற்க்கெல்லாம் என்ன சொல்லுகிறார்கள்:**

இறால் வளர்ப்பு மிகச் சிறந்த தொழில் என்றும் அதனால் சுற்றுச் சூழலுக்கோ விவசாயத்திற்கோ, எந்த பாதிப்பும் இல்லை என்று பண்ணை முதலாளிக்கும் முந்தி குரல் கொடுப்பவர் மணிசங்கர் ஐயர் தான். எல்லா தொழிலிலுமே இருக்கின்ற சாதாரண சிறு பாதிப்புகள் இறால் வளர்ப்பிலும் இருக்கவே செய்கிறது, ஈட்டித் தரும் அந்நியச் செலாவணி. அதனால் அரசுக்கு கிடைக்கும் பயன் அனைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கருவாடு விற்ற காசு நாறுமா?

இறால் பண்ணைகளுக்கு வக்காலத்து வாங்கும் மணிசங்கர் ஐயர்

திலும் மேலானதாகும் என்கிறார். விவசாயத்தை பாழ்படுத்த வேண்டும் என்று யாரும் நினைக்கவில்லை அப்படி எதுவும் நடக்கவுமில்லை வெறும் கடலோர சதுப்பு நிலங்களையும் பொட்டலாய் கிடக்கும் புறம்போக்கு நிலங்களையும் தான் அதிகம் பயன்படுத்துகிறார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் நல்ல விளைநிலங்களை ஈடுபடுத்துகின்றார்கள். ஆகவே விளைநிலம் வீணாகிறது என்பதெல்லாம் பொய் என்கிறார் மணிசங்கர் ஐயர். வாங்கிய லஞ்சத்துக்கு வக்காலத்து வாங்குகிறார்கள் என்பது தவிர இதிலே வேறெதுவும் இல்லை. இப்போது அவரே முன்னின்று இறால் பண்ணை முதலாளிகளின் சங்கம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்.

சுற்றுச்சூழல் பாதிப்புகள் என்பதெல்லாம் எதுவுமில்லை. இரசாயன கழிவுகளை முறையாகச் சுத்திகரித்து விட்டால் மீண்டும் அதே இடத்தையே பயன்படுத்த எந்தப் பிரச்சனையும் இல்லை என்கிறார். அந்தக் குறிப்பிட்ட பகுதியில் நிலத்தடி நீர் உப்பாகும் என்பது உண்மைதான் குடிநீர் வேறு பகுதிகளிலிருந்து ஏற்பாடு செய்து கொள்ள வேண்டியதுதான். சென்னை பம்பாய் போன்ற நகரங்களிலெல்லாம் ஆங்காங்கே கிணறு தோண்டி தண்ணீர் குடிக்கிறார்கள் என்று வியாக்கியானம் பேசுகிறார். விரல் விடக்கூடிய நகரங்களுக்கே வெளியிலிருந்து தண்ணீர் ஏற்பாடு செய்ய முடியவில்லையாம். இந்த லட்சணத்தில் கிராமங்களுக்கெல்லாம் வெளியிலிருந்து தண்ணீர் ஏற்பாடு செய்வாராம். அந்தந்த கிராமத்திலும் நிலத்தடி நீர் நன்றாக இருக்கும்போதே குடிநீர் விநியோகம் செய்ய வக்கில்லாதவர்கள் வெளியூர்களிலிருந்து கொண்டு வந்து கொடுப்பார்களா? கூரையேறி கோழி பிடித்தவன் கதைதான். இப்போதைக்கு எதைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லியாவது காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்று கையில் காசில்லாத குடிகாரன் கடன் கேட்கும்போது செய்வதைப் போலிருகுகின்றது இவர்களது பேச்சு.

**இறால் பண்ணை வளர்ந்தால் தொழில் வளருமா?**

இறால் பண்ணைகள் அமைத்து விட்டால் அதனைத் தொடர்ந்து இறால் பதனிடும் தொழிற்சாலைகள், இறால் தீவனம் தாயாரிக்கும் கம்பெனிகள் இன்னும் அதற்குத் தேவைப்படும் இஞ்சின்கள், மோட்டார்கள், போன்றவற்றை தயாரிக்கும் கம்பெனிகளும் படிப்படியாக வளர ஆரம்பிக்கும் என்கின்றனர். இவர்கள் உலகெங்கும் இறால் வளர்த்த இடங்களிலெல்லாம் பொட்டலாகிப் போனபின் போட்டதைச் சுருட்டிக் கொண்டு வேறு இடங்களுக்கு மாறிப் போனதுதான் நடந்திருக்கிறதே தவிர எவனும் அங்கு வேறு எந்த தொழிற்சாலையும் நடத்திக்கொண்டிருக்கவில்லை.

இந்தியாவிலேயே ஏற்கனவே இருக்கின்ற தொழிற்சாலைகளை எல்லாம் அரசாங்கமே முன்னின்று மூடிக்கொண்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடி, தொழில் நெருக்கடி சந்தை நெருக்கடி என்று காரணம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல லாபத்தில் இயங்கி வரும் தொழிற்சாலைகளுக்கு நெருக்கடி ஏற்படுத்தி வலிய சென்று பார்வையிட்டு நிறுவனங்களுக்கு விற்றுவிட திட்டமிட்டு வருகிறார்கள் மணி சங்கர் ஐயர்கள் புதிதாய் தொழில் வளர்க்கப் போவதாய் நம் காதில் பூச் சுற்றுகிறார்கள்.

**தனியார் முதலாளிகள் செய்கிறார்கள் சரி**
**அரசாங்கமும் ஏனிப்படி?**

பலருக்கும் ஏற்படுகின்ற சந்தேகம் தான். தனியார் முதலாளிகள் நாட்டைப் பற்றி ஏதும் கவலைப் பட போவதில்லை. தங்களின் லாபத்தை மட்டும் தான் பார்ப்பார்கள் என்பது அனைவரும் அறிந்தது. ஆனால் அரசாங்கமும் ஏனிதற்கு துணை நிற்க வேண்டும்? மொத்தமாக உயிர்கள் வாழ்வதற்கான அடிப்படைகளே இல்லாமல் போகும் என்ற நிலை இருந்தால் அரசாங்கம் எப்படி அதை ஆதரிக்க முடியும்?

மனுநீதிச் சோழன் காலந்தொட்டு அரசு பற்றி நமக்கு போதிக்கப்பட்டிருக்கும் விஷயங்கள் தான் இந்த சந்தேகங்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. அரசு என்றாலே மொத்த நன்மையை கருத்தில் கொண்டு செயல்படுவது, பிற நாட்டு ஆக்கிரமிப்புகளிலிருந்து நம்மை பாதுகாப்பதற்காக் பெரும்படைகளை கட்டி வைத்துக் கொண்டு தேசத்தின் நலன் காக்க செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்கிற கருத்துக்கள் எல்லாரும் அப்படித்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லாவற்றுக்கும் முதலில் நமது இந்திய அரசு சுயசார்பான சுதந்திர அரசாக இல்லை. எப்படி தனியார் முதலாளிகளுக்கு ஆதர வாளராக மணிசங்கர் ஐயர் செயல்படுகிறாரோ அதே போலத்தான் அந்நிய பன்னாட்டு நிறுவனங்கள், ஐ.எம்.எஃப், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் மற்றும் அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் ஏஜெண்டாக அவர்களின் நலன் காக்கும் தரகர்களாகவே தான் இந்திய அரசு செயல்பட்டு வருகிறது. அது மக்களின் நலன், தேச நலன் என்று பேசுவதெல்லாம் மக்களை அது போன்ற ஒரு மாயையில் வைத்திருக்கத்தான். ஆகவே எல்லா நாசகா ரத் திட்டங்களும் ஏகாதிபத்திய அரசு மற்றும் முதலாளிகளினால் வகுக்கப்படுகின்றன. இந்த அரசு மற்றும் முதலாளிகளால் செயல்ப டுத்தப்படுகின்றன. இந்த கண்ணோட்டத்திலிருந்து அரசாங்க நடவ டிக்கைகளை புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அதற் கான காரணங்கள் புரியும். அதன் நோக்கங்களும் புரியும்.

இறால் பண்ணை போன்ற கொடிய திட்டங்கள் குறித்தும் அரசு எப்படிப் பேசுகிறது என்று பாருங்கள். நமக்கு அந்நிய செலாவணி கிடைக்கிறதே! இதுதான் அவர்களின் அடிப்படையான வாதம். அதுவே இன்றைய புதிய பொருளாதாரக் கொள்கை.

**எமக்குத் தேவை அந்நியச் செலாவணி**

இறால் வளர்த்தாலென்ன. யானை வளர்த்தாலென்ன எதை விற்றால் லாபம் கிடைக்கிறதோ எதை வெளிநாட்டு முதலாளிமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் விரும்புகிறார்களோ அதை வளர்க்க வேண்டியது தான் என்கிறது அரசு. கூட்டிக் கழித்துப் பார்த்தால் அரசு இப்போது வகுத்திருக்கும் புதிய பொருளாதாரக் கொள்கை என்பது இதிவேதான். இனி மேலும் நாம் சொந்த பொறுப்பில் எதையும் உற்பத்தி செய்ய முடியாது. வல்லரசு நாட்டு முதலாளிகள் சொல்லுவதுபோல் செய்ய வேண்டியதுதான் என்கிறார்கள். வெளிநாட்டு எஜமானர்கள் எதை வாங்கிக் கொள்கிறார்களோ அதை நாம் விற்று விட வேண்டும். அப்படி விற்றுக் கிடைக்கும் அந்நிய செலாவணியைக் கொண்டு நம் நாட்டை முன்னேற்றி விடலாம் என்பதை ஏதோ தாரக மந்திரமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இருப்பது எதையும் விற்க முடிந்தால் விற்று விடு என்பது ஒரு கொள்கையா? இருக்கின்ற அடிப்படைகளை மூலப்போருட்களை, இயற்கை உங்களை பயன்படுத்திக் கொண்டு பொருளுற்பத்தி செய்து அதை விற்பது என்பதுதான் வளர்ச்சிக்கு அடையாளம். ஆனால் இந்தியாவிலிருந்து எதையெல்லாம் ஏற்றுமதி செய்கிறார்கள் என்பதைப் பாருங்கள். இரும்பு, நிலக்கரி, செம்பு, மாங்கனீசு, அலுமினியம், துத்தநாகம், ஈயம் என்று எல்லாவகையான கனிப் பொருட்களும் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வெட்டி வெட்டி எடுத்து அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். அதன் உச்ச கட்ட வளர்ச்சியான இன்று சொல்லப்படுகின்ற புதிய பொருளாதாரக் கொள்கையால் இதற்கான அரசுத் தொழில்களையே ஏகாதிபத்திய கம்பெனிகளுக்கு, திறந்து விட்டுவிட்டனர். அதாவது இது வரை நாம் தான் தோண்டி எடுத்து அனுப்பிக் கொண்டிருந்தோம். இனி மேல் அவர்களே தங்கள் விருப்பம் போல் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் நிலத்தை வளைத்துப் போட்டு சுரங்கம் வெட்டி என்ன கிடைக்கிறதோ எல்லாவற்றையும் கொண்டு போகலாம் என்று அதற்கு பொருள்.

## கனி வளங்கள் மட்டுமல்ல காடு மலைகளும் ஏற்றுமதி

இன்று வரை பல கோடிக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப் பட்டு மரங்களும் பிற பொருட்களும் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு விட்டன. இன்றும் கூட ஒரு நாளிலேயே லட்சக்க ணக்கான ஏக்கர்கள் அழிக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன. எல்லாமும் ஏற்றுமதிக்குத் தான். மலைப்பாறைகளை வெட்டி பல கைகளை அறுத்து பாலிஷ் போட்டு கற்பலகைகள் ஏற்றுமதி. இன்று இறால் பண்ணைகளைப் போலவே இந்த மலைகளை தகர்க்கும் பணி வேகமாய் முடுக்கிவிடப்பட்டு நடந்து வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விவசாயப் பொருட்கள் ஏற்றுமதி

பருத்தி விளைந்து நமது கைத்தறி நெசவாளர்களுக்கு கொடுக்காமல் பஞ்சு வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். ஏற்றுமதிக்கு தேவையில்லாத மிச்ச பஞ்சும் நூலும் தான் உள் நாட்டு நெசவாளர்களுக்கு. மாம்பழம், தக்காளி எல்லாம் பழமாகவும் பழச்சாறாகவும், ஜாம் செய்தும் ஏற்றுமதி செய்கின்றனர். இதிலும் மிச்சம் தான் உள் நாட்டு மக்களின் தேவைக்கு விநியோகிக்கின்றனர். அதே போல் வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியனவும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இன்னும் கால் நடைத் தீவன தயாரிப்புக்காக புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவை தவிர கோதுமை, மெல்லிய ரக அரிசி, சர்க்கரை இவையெல்லாம் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## பிற ஏற்றுமதிப் பொருட்கள்

அவற்றுக்கெல்லாம் மேலாக இவற்றையெல்லாம் கூட யாராவது விற்பனை செய்வார்களா? என்று ஆச்சரியப்படும்படி எவ்வளவோ வியாபாரம் நடக்கிறது. மாட்டை வெட்டிக் கறியை டப்பாக்




களில் அடைத்து ஏற்றுமதி செய்கிறார்கள். மனித எலும்புகளையும் மொத்தமான எலும்புக் கூடுகளையும் ஏற்றுமதி செய்கிறார்கள். மனிதர்களின் தலைமயிரை ஏற்றுமதி செய்கிறார்கள் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா ஆனால் அதுவே உண்மை அதிலும் தலைமயிர் ஏற்றுமதியால் இந்தியாவில் தமிழகம் தான் முதலிடம் வகிக்கிறது என்று சமீபத்தில் பாராளுமன்றத்தில் வர்த்தகத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிவித்தார். இவ்வளவு அவ்வளவு இல்லை. கடந்த மூன்று ஆண்டுகளில் 537 டன்கள் தலைமயிர் ஏற்றுமதி தமிழகத்தில் நடந்திருக்கிறது.

www.tamilarangam.net



விஞ்ஞானிகள் ஏற்றுமதி    பட்டினிச் சாவு இறக்குமதி

இன்னும் எல்லாவகையான வேலைகளுக்கும் ஆட்கள் ஏற்றுமதி செய்கிறார்கள். விஞ்ஞானிகள், மருத்துவர்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறார்கள். (வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்புவது தான்) இந்தியர்கள் எல்லாரும் வெட்கப்படும் பிற அராபிய ஷேக்குகளின் காம வெறிக்கும் மேனாட்டு பதவிகளின் பாத சேவைக்கும் இந்தியப் பெண்களை ஏற்றுமதி செய்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும் அரசு சொல்லும் ஒரே காரணம் அந்நியச் செலவாணி நாட்டின் அவசியத் தேவை. அதை எந்த வழியில் எதை விற்று சம்பாதித்தாலும் தவறேதுமில்லை என்பதுதான்.

இப்படித் தன்மானம், சுயமரியாதை என்று எதுவுமே இல்லாமல் எல்லாவற்றையும் விற்று அந்நியச் செலாவணி சம்பாதிக்க வேண்டிய அவசியம்தான் என்ன? மனிதர் வாழ்வதற்கான சூழ்நிலைகளை பாழாக்கியும் நாளை நமது குழந்தைகளுக்கு குட்டிச்சுவர்களையும், சுடுகாடுகளையும், பாலைவனங்களையும் மட்டும் விட்டு வைத்து விட்டு மிச்சம் இருப்பவை எல்லாவற்றையும் விற்று அந்நியச் செலவாணி சம்பாதித்து யார் என்ன செய்கிறார்கள்? யாருக்கு என்ன அவசியம் வந்தது?

பாட்டன் சம்பாதித்த ஒரு ஏக்கர் முக்கால் ஏக்கர் நிலத்தை, வீட்டை, பண்டபாத்திரங்களை விற்றுத் தின்பவனை படுபாவி என ஏசுகிறார்கள் மக்கள். இப்படி ஒரு நாட்டையே எதுவுமே பாக்கியில்லாமல் விற்றுத் தின்று ஏப்பம் விடுபவர்களை என்னவென்று ஏசுவது?

www.tamilarangam.net

### அந்நிய செலாவணி சம்பாதிப்பது மீண்டும் மக்களுக்கு பயன்படுத்தவா?

இப்படி சம்பாதித்த அந்நியச் செலாவணியைக் கொண்டு மக்களுக்கு குடிக்க தண்ணீர் வசதி செய்கிறார்களா, சாலை வசதி செய்கின்றார்களா அல்லது பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள் கட்டுகிறார்களா? அல்லது அரிசி, பருப்பை இலவசமாக விநியோகிக்கிறார்களா? இதற்கெல்லாம் அந்நியச் செலாவணியா வேண்டும்? இல்லையே. அப்படியானால் இந்த அந்நியச் செலாவணியை வேறென்ன செய்கிறார்கள்?

மீண்டும் இந்த அந்நியச்செலாவணியைக் கொண்டு எளிய தரகு முதலாளிகளின் கம்பெனிகளுக்கு நவீன எந்திரங்களை வாங்குவதற்கும், இராணுவத்துக்கு பீரங்கி, துப்பாக்கி, ஏவுகணைகள் வாங்கவும், இன்னும் பெரும் பணக்காரர்களின் அவசர பயணங்களுக்காக அதிவேக விமானங்கள்வாங்கவும் தான் பயன்படுத்துகிறார்கள். இன்னும் பலவகையான ஆடம்பரப் பொருட்களை அழகு சாதனங்களை இறக்குமதி செய்யப் பயன்படுத்துகிறார்கள். இன்னும் பிற எல்லா பயன்பாடுகளும் இதே வழியில்தான். இதில் உழைக்கும் மக்களுக்கு நேரடிப்பயன்பாடோ, அல்லது மறைமுக உபயோகமோ, எதுவுமே இல்லை என்பதே உண்மை.

ஆனால் உழைக்கும் மக்கள் பொதுவாக நாட்டு நலனுக்காக தேசத்தின் முன்னேற்றத்துக்காக என்கிற வார்த்தைகளின் முன்னால் மயங்கி விடுகிறார்கள். ஒரு கைப்பிடி அளவேயான மேல் மட்ட பணக்காரக் கூட்டம் தான் தங்கள் சுகபோக சல்லாபங்களுக்காக அந்நிய நாட்டு பன்னாட்டுக் கம்பெனி முதலாளிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு இப்படி நாட்டின் செல்வங்களையும் மக்களின் உழைப்பனைத்தையும் சூறையாடுகிறார்கள். சுரண்டித் தின்கிறார்கள். அத்துடன் நில்லாமல் இன்று இறால் பண்ணை போன்ற நாசகாரத் திட்டங்களுடன் வந்து மக்கள் உயிர் வாழ்வதற்கான சூழ்நிலைமைகளையே சூறையாடத் துணிந்து விட்டார்கள். இந்த திருட்டுக் கூட்டத்தின் சதித் திட்டங்களை உழைக்கும் மக்களாகிய நாம் புரிந்து கொண்டு எதிர்த்துப் போராடி இவர்களையும் இவர்களின் எஜமானர்களையும் வீழ்த்தினால் தான் நமது வாழ்வோடு நமது நாட்டையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

### நாம் செய் வேண்டியது தான் என்ன?

ஆகவே தஞ்சை மண்டலத்து விவசாயப் பெருங்குடி மக்களே. நம் வாழ்வை அரித்துத் தின்று கொண்டிருக்கும் இந்த இறால் பண்ணைகளை ஒழித்துக் கட்டாமல் நமக்கு வாழ்க்கையில்லை. ஏற்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னவே வாழ்விழந்தவர்கள் மட்டுமல்ல. எஞ்சியுள்ள விவசாயிகளும் இதற்கான போராட்டத்தில் முன்னணிக்கு வரவில்லை என்றால் அவர்களுக்கும் அழிவு நிச்சயம் என்பதை இன்றே உணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது.

நாம் ஏற்கனவே பார்த்ததைப் போல் இந்த இறால் பண்ணைக ளின் சதிகாரப் பின்னணியை, அதன் நோக்கத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். மொத்தமாக நாட்டைச் சூறையாடும் சதித்திட் டத்தின் ஒரு பகுதிதான் இறால் பண்ணை. எந்த பகுதி சார்ந்த மக்களி டத்தில் என்னென்ன செல்வங்கள் குவிந்திருக்கின்றனவோ அவற் றுக்குத் தகுந்தவாறு, அவற்றை சூறையாடும் வகையில் தனித் தனித் திட்டத்துடன் தான் ஏகாதிபத்தியங்கள் நம் நாட்டில் புகுந்திருக்கின் றனர். எல்லா சதிகாரத் திட்டங்களையும் மொத்தமாக தொகுத்துத் தான் காட் ஒப்பந்தம், டங்கல் திட்டம், புதிய பொருளாதாரக் கொள்கை என்று பெயரிட்டு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இப் படிப்பட்ட மோசடிக் கொள்கையைத்தான் நாட்டு நலனுக்கானது, பெருவாரியான மக்களின் முன்னேற்றம் அதற்குள் கண்ணுக்கு புலப் படாத வகையில் உள்ளடங்கி பதுங்கியிருக்கிறது என்று பித்தலாட் டத்துடன் பிரச்சாரம் செய்து வருகிறது காங்கிரசு அரசு. எந்த சதிகாரத் திட்டமானால் எனக்கென்ன எனக்குரிய கமிஷனை கொடுத்து விட் டால் அனுவும் பிசகாமல் செயல்படுத்த நான் தயார் என்று ரகசிய ஒப்பந்தம் போட்டுக் கொண்டு விட்டது ஜெயலலிதா பார்ப்பன பாசிச கும்பல்.

ஆகவே மக்கள் நலனில் அக்கறையற்ற தேச நலனில் பற்றற்ற, பெற்ற தாயையும் கூட்டிக் கொடுத்து வயிறு வளர்க்கத் துணிந்து விட்ட அறுவெறுக்கத் தகுந்த இந்த காங்கிரசு, அ.தி.மு.க. கருங்காலி கும்பலை கூண்டோடு ஒழிக்க வேண்டும். இறால் பண்ணை முதலா ளிகளை இறால் குஞ்சுகளோடு சேர்த்து கடலில் மூழ்கடிக்க வேண் டும். நாம் இழந்து விட்ட பூமித்தாயையும், காவிரித்தாயையும் மீட்ப தற்கான நமது போராட்டங்களை நமது தேசத்தை சூறையாடும் பிற





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கார்கில் விவசாய பண்ணையை எதிர்த்து கர்நாடக விவசாயிகளின் போர்க்குணமிக்க போராட்டம்!

எல்லா கொடுங்கோன்மை சக்திகளுக்கு எதிரான போராட்டமாக வளர்க்க வேண்டும். பிற மக்கள் போராட்டங்களோடு ஒன்றிணைக்க வேண்டும். உழைக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் நமக்குள் ஊறிப்போயிருக்கும் தேவையில்லாத சாதி, மத வேறுபாடுகளை ஒதுக்கித்தள்ளி ஒன்றிணைந்து நின்றால் எந்தச் சக்தியாலும் நம்மை நம் மண்ணிலிருந்து அகற்றி விட முடியாது நமது போராட்டத்தை முறியடிக்க முடியாது.

உழைக்கும் மக்களே நமது நலனுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் ஒன்றிணைவோம்! கொதித்தெழுவோம்.

**உழைக்கும் மக்கள் ஒன்று சேர்வோம்!**
**பண்ணை முதலாளிகளை விரட்டி அடிப்போம்**

தாய்லாந்தில் 10 லட்சம் ஏக்கர் சதுப்பு நிலக் காடுகளில் 30 ஆண்டுகளில் 5 லட்சம் இறால் பண்ணைகள் உருவாகின. இதனால் மீனவர் வாழ்க்கை ஒழிந்தது. ஈக்வேடார் நாட்டின் அடர்ந்த காடுகள் 80-க்குப் பின் இறால் வளர்ப்பால் முற்றிலும் அழிந்தன. மீனவர்கள் அழிவின் விளிம்பில் இருக்கிறார்கள். இதே நிலை நமது நாட்டு மக்களுக்கும் வரவேண்டுமா? உழைக்கும் மக்களே சற்று சிந்தியுங்கள். விவசாயிகள், மீனவர்கள் வாழ்க்கையைத் தட்டிப் பறிப்பது இறால் பண்ணை. உழைக்கும் மக்களை ஓட்டாண்டிகளாக்கி விட்டு ஒரு சில முதலாளிகளைக் கொள்ளை அடித்து கொழுக்கச் செய்வது இறால் பண்ணை. ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள பணக்காரர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய் ருசிக்காக உற்பத்தி செய்யப்படுவது இறால். உழைக்கும் மக்கள் இவற்றை கண்ணால் கூட பார்க்க இயலாது.

ஆண்டாண்டு காலமாய் நமக்குத் தாயைப் போல வாழ்வளித்த நிலத்தினை உவராக்கிக் கெடுப்பது இறால் பண்ணை. குடித்தண்ணீரை உப்பு நீராக்குவது இறால் பண்ணை. நிலத்தடிநீர், உப்பு நீராவதால் நஞ்சை பூமியான தஞ்சை பூமி பஞ்ச பூமி ஆவதையும் புல், மரமட்டையின்றி பாலைவனமாவதையும் சகித்துக் கொள்ள முடியாது.

விவசாயிகளையே பிரித்தாண்டு மோதவிட்டு தனது கொள்ளையைத் தொடரும் இறால் பண்ணை முதலாளிகளின் சதியை முறியடிக்க வேண்டும். இடைத் தரகர்களாக செயல் படும் மக்கள் விரோதிகளை முறியடிக்க வேணடும். நாட்டை மறு காலனி ஆக்கும் ''காட்-டங்கல்' ஒப்பந்தத்திற்கு எதிரான போராட்டமாக இதனை வளர்த்தெடுக்க வேண்டும். தாயை விற்று நாயை வாங்குவதா? மக்கள் வாழ்வை விற்று அன்னியச் செலாவணியா?

நாளெல்லாம் நமது செல்வம் கொள்ளை கொண்டு போகவோ
நாம் சாகவோ? வீரர்கள் நாம் அல்லமோ?
உயிர் என்ன நமக்கு வெல்லமோ?''
கொலைவாளினை எடடா - மிகு
கொடியோர் செயல் அறவே,
இலையே உணவிலையே எனும்
எளிமை இனிமேலிலை - எனவே
முரசறைவாய்! முரசறைவாய் - என
வீறு கொண்டெழுவோம்!

இறால் பண்ணைக்கு எதிராக அனைத்து அமைப்புகளும் விவசாயிகளும் ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து இறால் பண்ணை முதலாளிகளையும் அவர்களுக்குத் துணை போகும் அரசினையும் முறியடிப்போம்!

கர்நாடக விவசாயிகள் நஞ்சுண்ட சாமியின் தலைமையில் கார்கில் விதை பண்ணையை அடித்து விரட்டியது போல ஒரு போர்க்குணம் மிக்க போராட்டத்தின் மூலம் இறால் பண்ணைகளை ஒழித்துக் கட்டுவோம்!

இறால் பண்ணை முதலாளிகளையும் அவர்களது புரோக்கர் மணிசங்கர் ஐயனையும் விரட்டியடிப்போம்!

விளைநிலங்கள் பாலை நிலங்களாவதைத் தடுப்போம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*இறால் பண்ணைகளை ஆழ்கடலில் வீசியெறிவோம்!*


★ இழந்த வாழ்வையும் எதிர்கால வாழ்க்கை நிலைமைகளையும் மீட்டெடுப்போம்!

★ இறால் பண்ணைகள், சமூக நலக் காடுகள் உள்ளிட்ட நாட்டை சுடுகாடாக்கும் எல்லா நாசகாரத் திட்டங்களையும் முறியடிப் போம்!

★ காட் ஒப்பந்தம், டங்கல் திட்டம், புதிய பொருளாதாரக் கொள்கை. சதிகாரத் திட்டங்கள் எந்த பெயரிலிருப்பினும் அடையாளம் கண்டு முறியடிப்போம்!

★ இறால் பண்ணை எதிர்ப்பு போராட்டங்களை, ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் போராட்டங்களுடன் ஒன்றிணைப்போம்.

★ நாடு மறுகாலனி ஆவதை தடுப்போம்! உழுபவருக்கே நிலத்தை சொந்தமாக்குவோம்!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்